சிறுமிகள் முதல் பெண் கலெக்டர் வரை பாலியல் சீண்டல்கள்!

த.வெ.க. ஆட்சியில் இதுதான் பெண்களின் பாதுகாப்பா?

'தூய சக்தி' விஜய் கண்டுங்காணாமல் இருப்பது ஏன்?

"வடமாவட்டங்களில் கள்ளச் சாராய சாவுகள் அடிக்கடி நடைபெறும் மாவட்டமான குறிச்சி மாவட்டத்தில் இரண்டு பெயரை தன் பெயரில் கொண்டிருப்பவர் எம்.எல்.ஏ.வாக உள்ளார். இவர் வெளிநாடுகளில் பணி யாற்றி விட்டு, சென்னையில் சில காலம் பணியாற்றி னார். தேர்தலுக்கு ஓராண்டுக்கு முன்னர் தான் அரசியலுக்கு வந்தார். வந்தவருக்கு சீட் வழங்கப்பட்டு விட்டது.

புதிய மாவட்டமான இந்த மாவட்டத்தின் எம்.எல்.ஏ.வாக த.வெ.க. வைச் சேர்ந்தவர் வெற்றி பெற்றார். இளம் வாலிபர். இதனால் துடிப்புடன் வேலை செய்வார் என்று மக்கள் நினைத்தனர். ஆனால் இவர் வேலையைத் தவிர மற்ற வேலைகளில் துடிப்புடன் செயல்படத் தொடங்கிவிட்டார்.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் எம்.எல்.ஏ.வாக இருப்பதால், மாவட்டத்தின் பெண் கலெக்டர் இவருக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். அவரும் இளம் கலெக்டர் என்பதால், ஏதாவது மக்களுக்கு செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் இருப்பவர். இவரது கணவரும் பக்கத்து மாவட்டத்தில் கலெக்டராக இருப்பவர். அவரும் அதே போல மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைப்பவர்.

ஆனால், கலெக்டர் தனக்கு கொடுக்கும் மரியாதையை தவறாக புரிந்து கொண்ட எம்.எல்.ஏ. தவறான பொருள்படும்படி மெசேஜ் அனுப்பியுள்ளார். இரவில் நன்றாக குடிக்கும் பழக்கம் உள்ள எம்.எல்.ஏ. தினமும் இரவில் குடிப்பாராம். இந்தநிலை யில்தான் போதையில், தனது மாவட்டத்தின் பெண் கலெக்டருக்கு ஆபாச எஸ்.எம்.எஸ். அனுப்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

மேலும், ஒரு நாளில் இரவில் வீட்டுக்கு வந்ததாகவும் கூறப்படுகிறது. அவரும்



மக்கள் பிரதிநிதி என்பதால் மரியாதை கொடுத்து பேசியுள்ளார். ஆனால், அவரது பேச்சு சரியில்லை என்பதால், தனது கணவரிடம் கூறியுள்ளார். அவர் உடனடி யாக மனைவி பணி யாற்றும் மாவட்ட எஸ். பி.க்கு தகவல் கொடுத்துள்ளார். எஸ்.பி. பெண் என்பதால், புகாரின் தீவிரத்தை உணர்ந்து டி.எஸ்.பி.யை அனுப்பி விசாரித் துள்ளார். தற்போது கலெக்டருக்கு 24 மணி நேரமும் பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சி எம்.எல்.ஏ.வின் இந்த அத்துமீறல் குறித்து கட்சியின் பொதுச் செயலாளரும், விழுப்புரம் மாவட்டப் பொறுப்பாளருமான புஸ்ஸி ஆனந்தி டம் புகார் செய்யப்பட்டுள்ளது. அவர் சம்பந் தப்பட்ட எம்.எல்.ஏ. மற்றும் பெண் கலெக்டர் மற்றும் அவரது கணவர் ஆகியோரை நேரில் அழைத்து விசாரித்துள்ளார். பின்னர். இது குறித்து எம்.எல்.ஏ.வை கடுமையாக திட்டி அனுப்பியுள்ளார். ஆனால்எம்.எல்.ஏ.க்குஅடிவிழுந்ததாகவும் அவரது தொகுதியில் பேசும் பொருளாக உள்ளது. தற்போது ஒரு பெண் கலெக்ட ருக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக புகார்கள் எழுந்துள்ளன.

இந்த விவகாரத்தை தற்போது மூடி மறைக்கும் வேலைகள் நடந்து வருகின் றன. கலெக்டரிடம் புகார்கொடுக்க வேண்டாம் என்று ஆளுங்கட்சி சார்பில் கோரப்பட்டதால் புகார்கள் கொடுக்காமல் மன்னித்து விட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. பெண் கலெக்டர் பெருந்தன்மையாக நடந்து கொண்டாலும், மக்கள் பிரதிநிதியான எம்.எல்.ஏ. தனது நிலையில் இருந்து தவறுவது நல்ல தல்ல. நாளை மக்கள் எப்படி இவரை நம்பி செல்ல முடியும் என்றும் பொது மக்களும், சமூக ஆர்வலர்களும் கேள்வி எழுப்புகின்றனர்.

"ஏற்கனவே ஒரு எம்.எல்.ஏ. மற்றும் கட்சி நிர்வாகிகள் மீது மகளிரணி நிர்வாகிகள் உட்பட பல பெண்கள் பாலியல் புகார் கொடுத்திருக்காங்க அதுக்கே இன்னும் பதில் கிடைக்கல. இப்போ பெண் கலெக்ட ருக்கே ஆளும் கட்சி எம்.எல்.ஏ. இரவில் வில்லங்க மெசேஜ் அனுப்பி இருக்காரே. இதை எப்படி சொல்லுவாங் கன்னு கேட் டோம். இதுதான் இந்த ஆட்சியில் பெண்களின் பாதுகாப்புக்கு சாட்சி.

நன்றி :
'தினகரன் அரசியல் டைரி'
10.11.2026

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; தேனியிலே காவல்துறை சிறப்பு ஆய்வாளர் ஒருவர் அநியாயமா கொல்லப்பட்டிருக்கிறார். விஜய் அரசு, அவரது குடும்பத்திற்கு 40 லட்ச ரூபாய் நிதி உதவி அறிவிச்சிருக்கே! உயிரின் விலை அவ்வளவுதானா?

பட்டணம் : ஆமாமய்யா; நீங்க கேக்கறது நியாயம்தான். ஒரு விஷயம் தெரியுமா. போன மாசம் த.வெ.க. அரசு ஒரு ஜி.ஓ. போட்டது. அதில், 'காவல்துறை அதிகாரிகள் பணியின்போது உயிரிழந்தால் ஒரு கோடி ரூபாய் நிதி உதவி தரப்படும்ன்னு' சொன்னாங்க. இப்ப அவங்க ஜி.ஓ.வையே ஃபாலோ பண்ணல. நல்லாதான் நடக்குது த.வெ.க. ஆட்சி!

போர்களத்தில் இருந்து பயந்து ஓட்டம்!

66 ராணுவ வீரர்களுக்கு மரண தண்டனை – காங்கோ அரசு அறிவிப்பு!

காங்கோ, நவ.12 -

2025 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து தற் போதுவரை 381 பேருக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டுள்ளது!

காங்கோ ஜனநாயகக் குடியரசில், பயம் மற்றும் உத்தரவுகளுக்கு கீழ்ப்படிய மறுத்த குற்றங்களுக்காகக் குறைந்தது 66 வீரர்களுக்கு ராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ள தாக, அந்நாட்டு ஊடகங் கள் செய்திகள் வெளியிட் டுள்ளன.

கிழக்கு காங்கோவில் உள்ள வடக்கு கிவு மாகா ணத்தின் வாலிகாலேவில் அமைந்துள்ள ராணுவ நீதி மன்றத்தில் 71 வீரர்களிடம் நடத்தப்பட்ட விசார ணையைத் தொடர்ந்து, 66 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நான்கு வீரர்கள் விடுவிக் கப்பட்ட நிலையில், மற் றொருவருக்கு 10 ஆண்டு கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஆயுதக் குழுக்களுடன் போரிடும் வீரர்களிடையே ஒழுக்கத்தை மேம்படுத்து வதே இதன் நோக்கம் என ராணுவம் தெரிவித் துள்ளது.

காங்கோ அரசுப் படை களுக்கும், மார்ச் 23 இயக் கத்தை உள்ளடக்கிய FRN *(Front for the Refoundation of the Nation)* குழுவிற்கும் இடையே தொடர்ந்து மோதல் நடைபெற்று வரு கிறது.

இந்நிலையில் இவர்களு டனான மோதலின்போது, தங்கள் நிலைகளைக் கை விட்டுத் தப்பி ஓடியதாக, தற்போது தண்டனை விதிக்கப்பட்டுள்ள வீரர் கள் அக்.20 அன்று கைது செய்யப்பட்டனர்.

கடந்த மாதமும், கிளர்ச் சி யா ள ர் க ளு ட ன ான மோதல்களின்போது முன் னணிப் பகுதியிலிருந்து பின்வாங்கியதாகக் கூறப் பட்ட தைத் தொடர்ந்து, கோழைத்தனம் உள்ளிட்ட இதேபோன்ற குற்றச் சாட்டுகளின் பேரில் 27 வீரர்களுக்கு மரண தண் டனை விதிக்கப்பட்டது.

வீரர்களிடையே நிலவும் பொறுப்பின்மை, பயம் மற்றும் ஒழுக்கமின்மை யால், ஆயுதக் குழுக்களுக்கு எதிரான ராணுவ நடவடிக் கைகள் பலவீனமாக இருப் பதாக கூறப்படுகிறது.

இதனால் அந்நாட்டு ராணுவம் தொடர்ந்து விமர்சனங்களைப் பெற்று வரும்நிலையில், குறைந்த ஊதியம் மற்றும் போதிய பாதுகாப்பு உபகரணங்கள் இல்லை என வீரர்கள் குற் றம் சாட்டுகின்றனர்.

மரண தண்டனை

கடந்த 2024 மார்ச் மாதம், மரண தண்டனை மீதான 20 ஆண்டு கால தடையை காங்கோ குடிய ரசு நீக்கியது.

ஆயுதக் குழுக்கள், கிளர்ச்சி ஆகியவற்றில் ஈடு படுவோர், அத்துடன் தேசத்துரோகம் மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுப டுவோ ருக்கும் மரண தண் டனை விதிக்கப்படும் என தெரிவித்தது.

மரண தண்டனையை மீண்டும் அமல்படுத்தும் முடிவு, மனித உரிமை அமைப்புகளால் கடுமை யாக விமர்சிக்கப்பட்டது. இருப்பினும் இதுவரை எந்த மரண தண்டனையும் நிறைவேற்றப்படவில்லை.

பிரெஞ்சு ஒளிபரப்பு நிறுவனமான RFI தொகுத்த புள்ளிவிவரங்களின்படி, 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து தற் போதுவரை குறைந்தது 507 வீரர்கள் குற்றவாளி களாக அறிவிக்கப்பட்டுள் ளனர், இதில் 381 பேருக்கு மரண தண்டனை விதிக்கப் பட் டுள்ளது.

ஆயுதக் கிளர்ச்சிக் குழு

FRN (Front for the Refoundation of the Nation) என்பது காங்கோ ஜனநாய கக் குடியரசின் கிழக்குப் பகுதியில் செயல்பட்டு வரும் ஒரு புதிய கூட்டணி ஆயுதக் கிளர்ச்சிக் குழுவா கும்.

இது முன்பு பரவலாக அறியப்பட்ட M23 கிளர்ச் சிக் குழு உள்ளிட்டவற் றின் மறுவடிவமாக, பல கிளர்ச்சிக் குழுக்களை ஒன் றிணைத்து உருவாக்கப் பட்டுள்ளது.

தற்போதைய காங்கோ அரசாங்கத்தை வீழ்த்து வதே இக்குழுவின் முக்கிய நோக்கமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த FRN குழுவின் தலைவராக காங்கோவின் முன்னாள் அதிபர் ஜோசப் கபிலா நியமிக்கப்பட்டுள் ளது குறிப்பிடத்தக்கது.

காவல்துறை அதிகாரி உள்ப ஒரே நாளில் 15 கொலைகள்! அமைச்சரோ கொலைகள் நடப்பது 'சகஜம்' என்கிறார்!

பதில் சொல்ல வேண்டிய முதலமைச்சர் 'சைலண்ட் மோடில்' இருக்கிறார்!

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, நவ.12 -

திராவிடர் கழகத் தலை வர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் சட்டம் - ஒழுங்கு சொல்லும் தரத்தி லில்லை. கொலைச் செய்தி கள் அன்றாடம் வருவதும், தலைவர்கள் கண்டனம் தெரிவிப்பதும் அன்றாடச் செய்திகளின் ஒரு பகுதியா கிவிட்டது. வெளியில் செல் லும் மக்கள் வீடு திரும்பி னால் தான் வாழ்க்கை உறுதி என்னும் கொடுஞ் சூழலுக் குள் தமிழ்நாடு சிக் கித் தவிக்கிறது.

ஒரே நாளில் 15 கொலைகளா?

கடந்த இரு நாட்களுக்கு முன்னால் தீபாவளி அன்று மட்டும் 15 கொலைகள் தமிழ்நாட்டில் நடைபெற்றி ருக்கின்றன.

தேனி மாவட்டம், பழ னிசெட்டிப்பட்டியில் செந் தில்குமார் (57); திருச்சி மாவட்டம், இனாம் சமயபு ரத்தில் விஷால் (17), ராகுல் (17), புறத்தாக்குடியில் கிறிஸ்டோபர் (20); பெரம் பலூர் மாவட்டம், நொச்சி யத்தில் ரவி (50); கடலூர் மாவட்டம், பெரியகாட் டுப்பாளையத்தில் டுபிருத் விராஜன் (26); கள்ளக்கு றிச்சி மாவட்டம், நின்னையூரில் பாலசுப்பிரம ணியன் (70); சென்னை மாவட்டம், வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகரில் தனுஷ் (19), திருவொற்றியூரில் பவித்திரன் (32); காஞ்சிபுரம் மாவட்டம், திருக்காலி மேடு நேதாஜி நகரில் பார்த்திபன் (32); சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தெற்குத் தெரு வில் தங்கச்சாமி என்ற நவீன் (26), மானாமதுரை அருகே வேலூர் முருகபாஞ்சானில் விக்னேஷ் (24); திண்டுக்கல் மாவட்டம், எரியோடு பாண்டியன் நகரில் சுவேதா (26); விருதுநகர் மாவட்டம், வடக்குப்பட்டியில் அன்புச் செல்வம் (25); திருவள்ளூர் மாவட்டம், சென்றான்பா ளையம் அருகே மேகலா (24) உள்பட 15 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் காவல்து றையினருக்கே பாதுகாப் பில்லை என்னும் நிலை அசாதாரணமானது. தேனி யில் கொல்லப்பட்ட செந் தில்குமார், காவல்துறை சிறப்பு உதவி ஆய்வாளரா கப் பணியாற்றியவர். நடுச்



சாலையில் பட்டாசு வெடித்து அட்டூழியம் செய்து கொண்டி ருந்த போதையாளர்களைத் தடுக் கச் சென்றபோது கொலை செய்யப்பட்டுள்ளார்.

காவல்துறையினருக்கே பாதுகாப்பில்லை!

இதேபோல, தாழை யூத்து காவல்நிலையத்துக் குட்பட்ட பகுதியில் தக ராறு செய்த இளைஞர்களைத் தடுத்த காவலர்கள் மீது தாக்குதல்,

கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் பகுதியில் தகராறில் ஈடுபட்ட இளை ஞர்களைத் தடுக்கச் சென்ற காவல் ஆய்வாளர், சிறப்பு உதவி ஆய்வாளர், காவலர் ஆகிய மூவர் மீது தாக்குதல்,

அரியலூர் மாவட்டம் செந்துறை அருகில் நள்ளிர வில் மது அருந்தி கலாட்டா வில் ஈடுபட்டவர்களைத் தட்டிக்கேட்ட தளவாய் காவல்நிலையக் காவலர், ஊர்க்காவல் படை வீரர் உள்ளிட்டோர் மீது தாக்கு தல் - இதில் ஊர்க்காவல் படை வீரர் உயிரிழப்பு.

மக்கள் பாதுகாப்புக்காக உழைக்கும் காவல்துறையி னரின் உயிருக்கே பாதுகாப் பில்லை என்னும் செய்தி, வன்முறையில், அட்டூழியங் களில் ஈடுபடுவோருக்கு இன்னும் தைரியம் அளிக் காதா?

இதன் விளைவு என்னவாகும்?

காவல்துறையினருக்கு 'நமக்கேன் வம்பு - நம்மைக் காப்பாற்றிக் கொள்வோம்' என்ற எண்ணம் வந்தால், அதன் விளைவு? கடமை உணர்ச்சியே பட்டுப் போகுமே!

காவல்துறையினராலும் பாதுகாப்பில்லை!

இது ஒரு புறம் என்றால், இன்னொருபுறம், காவல்து றையினரால் பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகும் நிகழ் வுகளின் பட்டியலும் செய் திகளில் வருகிறது.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி திருக்காணா ப்பட்டியில் உள்ள டாஸ் மாக் பாருக்கு எதிராக ராஜ் குமார் என்ற இளைஞர் மற் றும் சில அமைப்புகளுடன் இணைந்து போராட்டம் நடத்தியதால் ஆத்திரம டைந்த எதிர் தரப்பினர், அந்த இளைஞரை போதைப்பொருள் வழக் கில் சிக்க வைக்கத் திட்டமி ட்டுள்ளனர், அதற்குக் காவல்துறை உடந்தையாக இருந்தது சிசிடிவி காணொலி மூலம் உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது.

சட்டப்பேரவை துணைத் தலைவரின் அநாகரிகச் செயல்!

தமிழ்நாடு சட்டப்பே ரவை துணைத் தலைவர் ரவிசங்கரைச் சந்தித்து, தனது பகுதி அடிப்படை வசதிகள் குறித்துப் புகாரளிக்கச் சென்றவரைத் சட்டப்பேரவை துணைத் தலைவரே தாக்கிய காணொலி வெளிவந்ததும், தாக்கப்பட்டவர் அதற்கு மறுப்பு தெரிவிப்பதாக ஒரு காணொலி வெளியிடப்பட் டது. ஆனால், அது காவலர் களும் சட்டப்பேரவை துணைத் தலைவரும் தன்னை மிரட்டி எடுத்த காணொலி என்று அடுத்து அவர் வெளிப்படுத்திவிட் டார்.

வெட்கமாக இல்லையா?

சென்னையில் புயலில் சிக்கி மீனவர்கள் இறப்பதற் குக் காரணம் யார் என்று கேள்வி எழுப்பியவரைக் காவல் அலுவலர் மிரட்டும் காணொலி வெளிவருகிறது.

சீரழிந்து கிடக்கும் இளைய தலை-முறை

கேட்கும் செய்திகளில், கொடுமையினும் கொடு மையாகக் கொலை செய் யப்பட்டோர், கொலை செய்தோர், வன்முறையில் ஈடுபட்டோரில் பெரும்பா லோர் 18 வயது கூட நிரம் பாதவர்கள். அதிகபட்சம் 20 - 25 வயதினர். மதுவும், கஞ்சா - மருந்து போதைக ளும், திரைப்படங்கள் தரும் மிதமிஞ்சிய வன்முறை போதையும், கட்டுப்படுத்த ஆளில்லை என்னும் போக் கில் அவர்களை நினைக்க வைத்திருக்கும் அரசும் தானே இதற்குக் காரணம்? இளைய சமுதாயம் இப்ப டிச் சீரழிந்து போயிருப்ப தைக் கண்டு நம் நெஞ்சம் குமுறுகிறது.

பொறுப்பேற்க வேண்டிய முதலமைச்சரின் அமைதி!

இத்தகைய கொடுமை கள், சட்டம் - ஒழுங்குச் சீர் கேடுகளைத் தடுக்க வேண் டிய பொறுப்புமிக்க அத் துறையின் அமைச்சரும், மு த ல மை ச் ச ரு மா ன ஜோசப் விஜய் அவர்கள் இது குறித்து எந்தக் கருத் தும் கூறாமல், எந்த நடவ டிக்கையும் மேற்கொள்ளா மல், கண்டும் காணாமல் இருப்பது நியாயமா? பொறுப்பேற்க வேண்டிய வர் வாய்திறக்காமல் இருப் பது பொறுப்பற்ற செயல் அல்லவா?

எதற் கெடுத்தாலும் தி.மு.க. மீது பழி போட்டு, திசை திருப்புகின்ற பணிகள் சில ஊடகங்களின் உதவி யோடு நடத்தப்படுகிறது.

ஆட்சி என்பது காட்சி அல்ல என்பதைத் திரும்பத் திரும்ப முதலமைச்சருக்கு நினைவூட்ட வேண்டியிருக் கிறது. பொது மக்கள் உயிரச் சத்தில் இருக்கிறார்கள்.

அமைச்சரின் பொறுப்பற்ற பதில்

ஊடகங்களுக்குப் பதில் அளிக்கும் அமைச்சர் ஒரு வர், ஏதோ தீபாவளி என் றால் பட்டாசு வெடிப்பது இயல்புதான் என்பதைப் போல "தீபாவளி என்றால் சில கொலைகள் நடப்பது வழமைதான்!" என்று அளிக் கும் பதில், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுகிறது.

பொறுப்பற்ற, ஆளுமை யற்றவர்களின் கைகளில் தமிழ்நாடு சிக்கிக் கொண்டு படாத பாடு படுகிறது. தி. மு.க. ஆட்சியில் இருந்த நிலைமை என்ன? இப்போ திருக்கும் நிலைமை என்ன? திடீரென மக்கள் இப்படி மாறிவிட்டார்களா? காவல் துறையும், பாதுகாப்பும் அர சின் கட்டுப்பாட்டில் இருந்த காரணத்தால் சட் டம் - ஒழுங்கும் கட்டுப் பாட்டில் இருந்தது.

மக்களை வாட்டும் அரசு

விலைவாசி உயர்வு ஒரு பக்கம் மக்களை வாட்டுகி றது; கொலைவாசி உயர்வு ஒரு பக்கம் மிரட்டுகிறது. ஆட்சி நடத்துவது என்றால் என்னவென்று அறியாதவர் களின் அறியாமை காரண மாகத் தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய முதலீடுகள் பறிபோகின்றன.

இதுகுறித்தெல்லாம் கவ லைப்படாமல், தடுப்பதற் கான உரிய நடவடிக்கைக ளில் இறங்காமல், வேறு வேறு பிரச்சினைகளுக்கு மடைமாற்றிக் கொண்டும், ஊடகங்களுக்குச் செய்தி கொடுத்துக் கொண்டுமே காலத்தை ஓட்டிவிடலாம் என்று கருதுகிறார்களா த. வெ.க. அரசும் அதனை ஆட் டுவிப்போரும்? வாக்களித்த மக்களை என்னவென்று கருதுகிறார்கள்?

பிரபலம், மாய்மாலப் பேச்சுகள், தங்களை எப் போதும் பாதிக்கப்பட்டவர் களாகவே காட்டி 'விக்டிம் கார்டு' *(Victim Card)* நாடக மாடும் போக்கு இவற்றால், தமிழ்நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் ஏமாந்து போன தன் விளைவை ஒட்டு மொத்தத் தமிழ்நாடும் அனு பவித்துக் கொண்டிருக் கிறது.

ஏமாற்றியே காலந்தள்ள முடியாது!

திரைப்படங்களிலும், செல்பேசி ஊடகங்களிலும் மூழ்கடித்து மக்களை ஏமாற் றிவிடலாம் என்று இனியும் கருதாதீர்கள். மக்கள் கடும் அதிருப்தியில் இருக்கிறார் கள். அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து கொண்டிருந்த தமிழ்நாட்டை, இப்படிப் பார்க்க ஒரு போதும் மக்கள் விரும்பவில்லை. தமிழ்நாடு அரசு இதனை ஓர் எச்சரிக் கைக் காலமாக எடுத்துக் கொண்டு உடனடியாகச் செயலில் இறங்கவேண்டும்.

தாழ்ந்த தமிழ்நாடு, வீழ்ந்த தமிழ்நாடு ஆகி விடக் கூடாது!

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

அமெரிக்கத் தடையையும் மீறி சீனாவில் ஈரானின் எண்ணெய் விற்பனை!

நியூயார்க், நவ.12 –

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளையும் கட்டுப்பாடுகளையும் மீறி, சர்வதேசச் சந்தையில் தனது கச்சா எண்ணெயைத் தொடர்ந்து விற்பனை செய்வதற்காக ஈரான் புதிய வழிமுறைகளைக் கையாண்டு வருவது வெளிச்சத்திற்கு வந்துள் ளது. குறிப்பாக, சீனாவில் உள்ள துறைமுகங்கள், எண்ணெய் சேமிப் புக் கிடங்குகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து வசதிகள் மூலம் தனது எண்ணெய் வர்த்தகத்தை ரக சியமாகத் தொடர ஈரான் திட்ட மிட் டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன. ஈரானின் எண்ணெய் அமைச்சகத்தின் முன்னாள் உயரதி காரி எழுதிய ரகசியக் கடிதம் கசிந்த தன் மூலம் இந்த நடவடிக்கைகள் குறித்த பல முக்கிய விவரங்கள் தற்போது தெரியவந்துள்ளன.

ஈரானின் தேசிய எண்ணெய் நிறுவனத்தின் (NIOC) முன்னாள் தலைவர் ஹமீத் போவார்ட் எழுதிய தாகக் கூறப்படும் இந்தக் கடிதம், அந்நாட்டின் எண்ணெய் வர்த்தகத் தில் பின்பற்றப்பட்டு வரும் உத்தி களை விவரிக்கிறது. அப்போது உச் சத் தலைவர் அலி கமேனியின் அரசியல் ஆலோசகராக இருந்த அலி ஷம்கானிக்கு அவர் இந்தக் கடி தத்தை எழுதியுள்ளார். ஈரானின் முன்னாள் அதிபர் இப்ராஹிம் ரைசி யின் ஆட்சிக்காலத்தில் பின்ப ற்றப் பட்ட எண்ணெய் விற்பனை முறைக ளையும், தற்போதைய அதிபர் மசூத் பெஷெஷ்கியான் தலைமையில் உருவாக்கப்பட்ட மாற்றுத் திட்டங்க ளையும் அதில் ஒப்பிட்டுள்ளார்.

அத்து மீறும் த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் மீது நடவடிக்கை எடுக்காமல்

முதல்வர் ஜோசப் விஜய் மவுனம் காப்பது ஏன்?

தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர், துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. கேள்வி!

தஞ்சாவூர், நவ.12 -

தஞ்சை மத்திய மாவட் டக் கழகச் செயலரும், திரு வையாறு சட்டமன்ற தொகுதி உறப்பினருமான து ரை . ச ந் தி ர சே க ர ன் அறிக்கை வெளியிட் டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி யிருப்ப தாவது: "த.வெ.க. அரசுக்கு ஏன் வாக்களித்தோம்? என்று தமிழக மக்கள் தின மும் வருந்தி வருகின்றனர். இந்நிலையில் கடும் விலை வாசி உயர்வு மற்றும் சட் டம் ஒழுங்கு சீர்கெட்டு தமிழகம் கொலைகளமாக மாறியுள்ளது. ஆட்சியா ளர்களால் ஏற்படுத்தப்ப



டும் இன்னல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது கடும் கண்டனத் திற்குரி யது. மாவட்டத்தில் உயர் பதவியில் உள்ள பெண் கலெக்டர் வீட்டுக்கே சென்று தொல்லை கொடுத் தது மட்டுமல்லாமல் ஆபாச குறுந்தகவல் அனுப் பிய கள்ளக்குறிச்சி த.வெ.க எம்.எல்.ஏ அருள் விக் னேஷ் மீது விசாரணை மேற்கொண்டு அவரை கைது செய்ய வேண்டும்.

இதேபோல் குடிநீர் கேட்டு கோரிக்கை வைக்க சென்ற சாமானியரை கடு மையாக தாக்கி தகாத வார்த்தைகளால் பேசியது டன், இன்ஸ்பெக்டரை வைத்து கொலை மிரட்டல் விடுத்து அச்சுறுத்திய துறை யூர் எம்.எல்.ஏவும், துணை சபாநாயகருமான ரவிசங் கர் மீது முதல்வர் நடவ டிக்கை எடுப்பாரா? என்று பொதுமக்கள் எதிர் பார்க் கின்றனர்.

இந்த இரண்டு பிரச்சி னைகள் குறித்து மவுனம் கலைப்பாரா முதல்வர் விஜய்? உடனடி நடவ டிக்கை எடுக்கவில்லை என் றால் முதல்வரின் ஒப்புத லோடுதான் இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதாக நம்பி தமிழக மக்கள் ஆட்சி யாளர்களுக்கு தக்க பாடம் புகட்டுவர். ஆகவே த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் 2 பேர் மீதும் உரிய நடவடிக் கையை உடனடியாக எடுக்க வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு தஞ்சை மத் திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசே கரன் எம்.எல்.ஏ அறிக்கை விடுத்துள்ளார்.